1986 நவம்பர் 17]

இரட்டை மங்களம் ஆதி திராவிட நல நடுநிலைப் பள்ளியை உயர் நிலைப் பள்ளியாக உயர்த்துதல்.

43—(*வினா எண். 3762) திரு. க. நரசிம்ம பல்லவன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இரட்டைமங்களம் கிராமத்தில் உள்ள ஆதி திராவிட நல நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

(முற்பகல் 10-10)

திரு. க. நரசிம்ம பல்லவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரட்டைமங்களம் கிராமத்தில் உள்ள நடு நிலைப் பள்ளியும், அதைச் சுற்றியுள்ள கிராமக் குடியிருப்புகள் அடங்கியுள்ள கிராமங்கள் அனைத்தும் ஆதிதிராவிடர்கள் வசிக்கின்ற பகுதிகளாக இருக்கின்றன. மேலும் அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கான கருத்துருக் களை எல்லாம் அரசுக்கு அனுப்பியிருப்பதாக அறியப்படுகிறது. அதற்குண்டான அனைத்து வாய்ப்புகளும் இருக்கின்றன. விரைவில் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசிலனையில் இருக்கின்றது. வருகின்ற ஆண்டிலே பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

தஞ்சை மாவட்டம் கடமங்குடி கிராமத்தில் ''தாட்கோ'' மூலம் வீடுகள்.

44—(*வினா எண். 7953) திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் குத்தாலம் ஒன்றியம், கடமங்குடி என்ற கிராமத்தில் ''தாட்கோ'' நிறுவனம் மூலம் வீடு கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அரசு, ஆதி திராவிடர்கள் கண்ணீர் துடைக்கும் நோக்கத்தோடு, ஆதி திராவிடர்க்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு